SUGAL & DAMANI

# SUGAL & DAMANI SHARE BROKERS LTD.,

MEMBER :
National Stock Exchange of India Ltd., Bombay Stock Exchange Ltd.,
Central Depository Services (India) Ltd.,
CIN : L65991TN 1993 PLC 028228

03/10/2023

**TO**
**BOMBAY STOCK EXCHANGE LIMITED**
**THE CORPORATE RELATIONSHIP DEPARTMENT**
**1ST FLOOR, NEW TRADING WING,**
**ROTUNDA BUILDING,**
**PHIROZE JEEJEEBHOY TOWERS**
**DALAL STREET,**
**MUMBAI – 400 001**

**SCRIP CODE: 511654**

**DEAR SIR,**

We enclose copy of Newspaper cuttings of "Trinity Mirror" and "Makkal Kural" of dated October 1, 2023 containing publication of our Announcement of Results of e-Voting at the Annual General Meeting of our Company held on September 29, 2023.

This is for your records please.

**YOURS FAITHFULLY,**
**FOR SUGAL & DAMANI SHARE BROKERS LIMITED**

Radhika Maheshwari
Digitally signed by Radhika Maheshwari
Date: 2023.10.03 11:31:58 +05'30'

**RADHIKA MAHESHWARI**
**COMPANY SECRETARY**
**ENCL.: AS ABOVE**

Regd. Office : City Centre Plaza, 1st Floor, No.7, Anna Salai, Chennai - 600 002.
Ph : 2858 7105 - 108 Fax : +91-44-42155285 **E-mail : sugalshare@sugalshare.com**
Investor Grievance **E-mail : grievance@sugalshare.com**



# Hindustan Petroleum Corporation cleans Central Station

Chennai, Oct 1: With Swachhta Hi Seva(Cleanliness is Noble Sevice) moto,Hindustan Petroleum Corporation South Zone, Chennai today Conducted a Mega Cleanliness Drive with association of 200 H.P.C.Officials and Distributors and Dealers in and around Central Railway Station Campus.

Sanjay Mathur take Mahatma Gandhi's Swachhta Pledge with the H.P.C.L.Staffs and Dealers and Distributors.

They cleaned the railway platforms, and the railway Station Yard.Rakesh Gupta, General Manager L.P.G, .Rakesh Mugunthan, Deputy General Manager LUBE, N.Radhika Deputy General Manager Retail, R.Natarajan,Head HR South Zone, K.Dhanasekar, President SEVA and S.Anbu General secretary SEVA were participated.



The 143rd birthday of Dr. Rajah Sir Annamalai Chettiar and 89th Founder's Day was celebrated in the University. , Vice-Chancellor Dr. RM.Kathiresan, Dr. S.M. Balaji, Managing Director, Balaji Dental, Craniofacial Hospital and Research Institute, Registrar (i/c) Dr. Singaravel, Members of the Syndicate and Academic Council, Controller of Examinations, Director of Distance Education, Deans of Faculties and Heads of Departments were also present at the celebration.



# Indian Bank conducts *My Soil My Nation* events in villages

Chennai, Oct 1: "Meri Maati Mera Desh - Amrit Kalash Yatra" (My Soil, My Country) marks the splendid culmination of our tribute to the Azadi Ka Amrit Mahotsav.

This profound initiative, orchestrated by the Government of India, serves a dual purpose: to nurture a deep sense of national pride and to pay homage to the valiant souls who made the supreme sacrifice for our freedom.

To celebrate the occasion, Indian Bank organised events in various villages and wards of Vellore, Kancheepuram and Kollam districts. These auspicious events commenced with the ceremonial collection of sacred earth ("Mitti") from households in a Kalashin the presence of representatives of local civil administration and senior officials of Indian Bank.

The events resounded with patriotic fervor as school children and other enthusiastic participants united to chant stirring patriotic songs and proudly hoist the national flag.

The soil gathered across the nation will be transported within the sacred vessel, the 'Amrit Kalash,' to New Delhi. In the nation's capital, this soil will be utilized to create an 'Amrit Vatika' adjacent to the National War Memorial. This symbolic act stands as a testament to the unity of 'Ek Bharat Shresth Bharat,' exemplifying the strength of our unified nation.

Throughout the country, a multitude of programs are underway to honour the brave martyrs, ensuring their legacy lives on.

# Athulya Senior Care launches campaign *Caring For A Senior*



Chennai, Oct 1: Athulya Senior Care, a leading provider of senior living solutions, is proud to announce its unique initiative in commemoration of International Day for Older Persons. In a bid to raise awareness about the importance of caring for our elderly population, Athulya launched a striking awareness campaign that saw messages displayed on traffic crossings across the city.

The campaign, titled "Caring For A Senior" featured messages and imagery that emphasize the significance of providing love, support, and respect to the elderly. These messages were prominently displayed at busy traffic crossings throughout the city, ensuring that they reached a wide audience.

"Older persons are an invaluable part of our society, and it is our collective duty to ensure their well-being and happiness," said Krishna KavyaJ ,Co Founder& Director Marketing , Athulya Senior Care. "Through this innovative campaign, we aim to remind everyone of the importance of caring for our elders and treating them with the dignity and respect they deserve."

Athulya Senior Care invites the community to join in this important initiative by sharing photos and messages from the campaign on social media using the hashtag #CareForASenior. By doing so, individuals can help spread the message of elder care and inspire others to take action in their own communities.

The campaign launch took place on ground on October 1st, 2023, and will run a social media campaign throughout the month, raising awareness by the powerful messages displayed at traffic crossings. Athulya Senior Care hopes that this initiative will spark conversations and encourage individuals and organizations to prioritize the well-being of older persons.

## PUBLIC NOTICE

Public notice is hereby given that Our clients Mr.SURESH TUKARAM SAWANT, S/o.late Mr. Tukaram Lakshman Sawant and Mr.RAMESH TUKARAM SAWANT, S/o.late Mr.Tukaram Lakshman Sawant, both are residing at old No.299, New o.114, Present New No.217, Triplicane High Road, Triplicane, Chennai-600005, has lost the original sale deed bearing Document No.492/1978 and the file of SRO Thiruvallikeni, Survey No.675 part in Mylapore Taluk, Triplicane Village, C.C.No. 1063, admeasuring 816 sq ft. Whoever may find the said document may please return to the under signed. Any transaction over the said property by anyone is not binding upon our client.

**S. ASHOKAN, B.Sc, B.L.,**
Advocate Notary Public, & Commissioner
Office: 16/35, Venkatachalam Street,
Triplicane, Chennai-600 005.
(Near Yadhava Chathiram)
Cell: 9841120939

## NAME CHANGE

I, Hussain Moiz Veeramgoanwala, C/o. Moiz Viramgamwala, Date of Birth: 11.11.1998, Residing at No.206/218, 2nd Floor, Royal Tower, Linghi Chetty Street, Chennai –600 001. shall henceforth be known as **Hussain Moiz Viramgamwala**

Hussain Moiz Veeramgoanwala,
C/o. Moiz Viramgamwala

## CHANGE OF NAME

I, Kirubasri, D/o.Paneerselvam presently residing at No.7. Rajagopal Street, Villupuram District, PIN:605602 in the state of Tamilnadu, here by declare that , I have changed my name from Kirubasri to **KIRPASHREE** . I shall hence forth be known as **KIRPASHREE.**

- Kirubasri

## PUBLIC NOTICE

My client Dr. Deepu Rajkamal Selvaraj S/o. Late Mr. S.F.V. Selvaraj aged about 50 years, residing at No. 2, Dr. Thirumoorthy Nagr, 3rd Street, Nungambakkam, Chennai – 600 034, his father Late Mr. S.F.V. Selvaraj owner of the property documents mentioned below, for the flats No. S1, S2, S3, S4, S5, S6, 1A, 1B, 1C, 1D, 1E, 2A, 2B, 2D, 2E and 3A at Casa Blanca – I, situated at New Door No. 17 & 18 (part) Main Street, Dr. Thirumoorthy Nagar, Chennai – 600 034, T.S. No. 128/7 & 128/3, Block No. 21 to the extent of 2 Ground and 207 sq.ft. registered in the Sub Registration District of Thousand Lights – II, Registration District of Chennai Central. The above properties original documents were lost, at the time of shifting of his father's office after the death of his father. It is not traceable. If anybody found the below mentioned original property documents, please inform to me or to my client.Know that, if anyone found this documents and tend to misuse it, which is illegal and the documents manipulated based on this documents are void and will not bind on my client, you will be prosecuted.

Sale Deed Nos.

1.Sale Deed under Document No. 1053/1995
2.Sale Deed under Document No. 1054/1995
3.Sale Deed under Document No. 1055/1995
4.Sale Deed under Document No. 1/1996
5.Sale Deed under Document No. 713/1996
6.Sale Deed under Document No. 172/1997
7.Sale Deed under Document No. 173/1997
8.Sale Deed under Document No. 174/1997
9.Sale Deed under Document No. 175/1997
10.Sale Deed under Document No. 176/1997
11.Sale Deed under Document No. 177/1997
12.Sale Deed under Document No. 1026/2002
13.Sale Deed under Document No. 80/2005
14.Sale Deed No. under Document 81/2005
15.Sale Deed under Document No. 82/2005
16.Sale Deed under Document No. 83/2005.

S. THIRUMAGAL,
Advocate
9176420313.

# Boult announces retail expansion

Chennai, Oct 1: BOULT, the fastest-growing wearable brand in India,today announcedits strategic expansion into offline retail markets across 13 states in India. This dynamicmovealigns with Boult's aggressive expansion and growth plans, as the brand has witnessed extraordinary success since its inception. It aims to bring Boult's premium audio and wearable products closer to consumers, tech enthusiastsand fitness aficionados, reaffirming its commitment to redefining experiences. Boult's expansion into offline retail includes Gujarat, Tamil Nadu, Karnataka, Maharashtra, Madhya Pradesh, Telangana, Bihar, Kolkata, Jodhpur, Jalandhar, Kashmir, and Jammu,strategically reaching customers in diverse regions, said, Varun Gupta, Co-Founder of Boult.

# BMW launches fully electric iX1

Chennai, Oct 1: The first fully electric BMW iX1 has been launched in India today. With this, the most successful BMW luxury sports activity vehicle - the X1 - becomes the first in its segment to offer a new electric avatar in addition to the petrol and diesel drivetrains.

Available as a completely built-up unit, the first fully electric BMW iX1 can be exclusively booked online at shop.bmw.in. Deliveries start from October onwards. Vikram Pawah, President, BMW Group India said, " We will continue to boost the ramp-up of electric mobility by carefully expanding our range with well-thought-out and innovative products like the first fully electric BMW iX1."

## NAME CHANGE

I, **SAYED MALIK SAYED AZIM** S/O.SAYED AZIM.Born on: 20 th August 1953 (Native District:- VILLUPURAM) residing at No:12/243, INDIRA NAGAR, PIDAGAM, VILLUPURAM DISTRICT.Pin-code- 607 202.Tamil Nadu. Shall henceforth be known as SAYED MALIK.

**SAYED MALIK SAYED AZIM**

## PUBLIC NOTICE

My Clients Mr.K.Karthikeyan S/o. Mr.Kothandam, & Mrs.K.Girija W/o. Mr.K.Karthikeyan resident of No. 7, Kalaivani Street , Keelkattalai, Old Pallavaram, Chennai – 600 117 on behalf of M/s.DYNAMIC AIR ENGINEERING INDIA PVT LTD, hereby informs the General Public that they purchased the land comprised in S.No.258/4 measuring an extent of 0.84 along with some other lands situated at Satharai Village, Thiruvallur District in favour of their Company name through a Sale Deed vide Document No.630/2018 dated 24.01.1984 registered on the file of Perambakkam. My clients states that Parent Document of the above Property vide Document No.50/1984 dated 24/1/1984 registered on the file of SRO, Perambakkam. On 02.03.2023 the above parent document was missed at Keelkattalai junction while it was submitted to their employee Mr.Mariappan for photocopying the documents. The said property is in the sole and absolute possession of my clients and it is absolutely free from any encumbrance whatsoever. Any person having any claim or interest over the said property, is requested to forward their claims along with the relevant documents to us within 30 days of this Public Notice. If we don't receive any claim from any person within 30 days, it will be strictly presumed that this property is absolutely free from any claim or encumbrance and no one has any claim over this property. If anyone is in possession of the original documents relating to the said property they are requested to hand over the same to us and contact us by phone number given below.

**M. Mahalakshmi M.sc., M.A., B.L.,**
**Advocate & Commissioner of Oaths,**
**10, 2nd Main Road, New Colony,**
**Chromepet, Chennai-600 044**
**Ph: 78712 62524**

## DOCUMENT MISSING

I am the absolute owner of the property being land and building bearing Western side of the Field No.C-4, Sunrise Avenue, Neelankaral, Chennai 600 041, at old No,145, New No.47, Neelangaral Vitage, Tambaram Taluk, Chengalpattu District (Formerly Saldapet Taluk, Chengal M.G.R.District) comprised in Survey No.79/2 (part) Patta No.3352, as per Patta New Survey No.79/13, measuring to an extent of 5.8 Cents or 2543 Sq.ft., Out of total extent of 11.6 cents or thereabouts was settled by my son R.Annamalai in favour of me by a deed of Settlement dated 07.04.2015 registered as Document No.2704/2015 in Book No.1, on the files of the SRO, Neelankarai was missing while white washing my house on 06.06.2022, if anyone found the same, please contact the me inthe address given below;

**A.RAMASWAMY,**
S/o.S.N.A.S.A.Annamalai Chettiar,
Old No.8, New No.21, Sathyanarayana Avenue,
Boat Club Road, Raja Annamalaipuram,
Chennai 600 028. (Cell No.94444 74464)

## ORIGINAL LAND/PROPERTY DOCUMENT LOST

**I, Manikandan.S, (Aadhar Card No.4956 3867 4915 )** Son of Sridhar, Hindu aged about 30 years residing at Sane Apartments 3rd Floor, No.21/11 10th Avenue, Muthalamman Koil Street, Ashok Nagar, Chennai- 600 083 do hereby inform to the General Public that I have the original land document pertaining to my property registered in Sale Deed Document No.370.2005 dated 11.05.2005 on the file of SRO Alandur, Tambaram Taluk, Kancheepuram District, the above document was missed on 21.09.2023 time at 04.20 PM in madras high court premises. If any one finds the said document, please contact me over **phone No.9094391980** or at the above residential address.

**Manikandan.S,**
PhoneNo. 9094391980
Sane Apartments 3rd Floor,
No.21/11 10th Avenue, Muthalamman Koil Street, Ashok Nagar,
Chennai- 600 083

## IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS (ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION) C.S.NO.100/2023

Mr.Subhash chand mehta
**..Plaintiff**

**Vs**

Mr.T.C Tamilvanan &3 others
**..Defendants**

1.Mr. K.K. Azees,
Son of Abdulla, No. 62, 2nd Main Road, Narayanaswamy Garden,
Kodungaiyur, Chennai-600 118.
2.Mr. V. Kumanan
Son of M.K. Veerabadran No. 7/4, Elango Street, Vivekandar Nagar,
Kodungaiyur, Chennai-600 118.

Please take will notice that the above suit will be posted for your appearance (defendants 2&3) on 04.10.2023 at 10.30 a.m of soon thereafter before the Hon'ble High Court of Judicature at Madras. If you fail to appear either in person or through pleader on the said hearing date, the case will be heard in your absence.

V.P. Raju 635/1986
G.A.Dominic Savio Joseph 87/1997
K.Venkatesan 69/2012
Counsel for Plaintiff
9444080808

## PUBLIC NOTICE

This is to inform to the general public that my client Mr. A.K. Jaffar Sadik Son of Kaja Mohideen, residing at No.3/2, Mir Ali Lane, Mannady, Chennai 600001, is the legal and registered owner in respect of Plot No.12 situated in G.K.C. Nagar, Minjur, Tiruvallur District, comprised in Old Survey Nos. 165/1, 2,3,4,5,6 New Survey No. 165/13, measuring 2903 sq.ft. he having acquired the same by way of sale vide Document No. 5703 of 2014 on the file of the Sub Registrar, Ponneri and has been in possession and enjoyment of the same since then. It is informed to the general public that my client has lost the original Sale Deed Document No. 5703 of 2015 and also the original title deed document No. 4485 of 2007 both on the file of the Sub Registrar, Ponneri while he was visiting High Court on 31.08.2023 between 1430 Hrs. and 1515 Hrs. The same could not be traced by him inspite of diligent search. My client states that he has not created any encumbrance, charge or mortgage on the said property. Any one having any interest or claim on the same, or in possession of the said documents, is hereby called upon to file their objections with documentary proof to the undersigned within ten days from this date, failing which it will be presumed that the above said original document are lost. Finder is requested to hand over the same either to me at the below mentioned address (or) to my client at the above address.

**G. Ramalingam**
Advocate
Egmore Bar Association
Chennai.

## SUGAL & DAMANI SHARE BROKERS LIMITED

CIN: L65991TN1993PLC028228
**'City Center Plaza', (I Floor), No. 7, Anna Salai, Chennai – 600 002**

At the 30th Annual General Meeting of the Company held on September 29, 2023 through other AudioVisual Means, the Members of the Company cast their votes by way of e-voting and e- Poll. The Company had appointed Ms. Sneha Jain, Company Secretary in Practice of M/s. Sneha Jain & Associates as Scrutinizer to scrutinize the e-voting process in a fair and transparent manner. The Scrutinizer has submitted her report dt. September 30, 2023 to Ms. Radhika Maheshwari, Company Secretary of the Company, which has been duly accepted by her. As per the said report the following results are announced by the Company.

**Details of Voting Results**

| S. No. | Particulars | Details |
|---|---|---|
| 1 | Date of the AGM/EGM: | 30th Annual General Meeting – September 29, 2023 |
| 2 | Total number of shareholders on record date: | 2877 |
| 3 | No. of shareholders present in the meeting either in person or through proxy:<br>Promoters and Promoter Group:<br>Public: | No arrangement for a physical meeting or appointment of proxy was made as the AGM was held through VC/OAVM |
| 4 | No. of Shareholders attended the meeting through Video Conferencing<br>Promoters and Promoter Group:<br>Public: | <br>08<br>08 |

**Announcement of results of Ballot and E-Voting**

| | S. No. | Type of resolution | No. of Votes Polled on by e-voting | No. of Votes polled on e-poll | No. of Votes – in favour | % of Votes – in favour | No. of Votes – against | % of Votes – against |
|---|---|---|---|---|---|---|---|---|
| Adoption of Financial Statements for the year ended March 31, 2023 | 1 | Ordinary | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |
| Re-appointment of Mr. Mahesh Chandak as Director | 2 | Ordinary | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |
| Re-appointment of Mr. Prasan Chand Jain as Director | 3 | Ordinary | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |

Note: The votes cast in favour are more than the votes cast against each resolution. Accordingly, the aforesaid resolutions for which e-voting and e - poll was conducted stands approved by the Shareholders with the requisite majority.

**For Sugal & Damani Share Brokers Ltd**
Sd/-
**RADHIKA MAHESHWARI**
Company Secretary

Place: Chennai
Date: 30.09.2023



பாராளுமன்ற தேர்தலில்

# தி.மு.க. வேட்பாளர் தோற்றால் மாவட்ட செயலாளர் நீக்கம்

## ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, அக்.1–

**பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க., வேட்பாளர் தோற்றால் மாவட்ட செயலாளர் நீக்கப்படுவார் என முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.**

பாராளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நடைபெற உள்ளது.இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள் புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி என 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்புடன் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்து வருகிறார்.

இதற்காக வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் கூட்டத்தை மண்டல வாரியாக கூட்டி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக இன்று தி.மு.க.,வின் 72 மாவட்ட செயலாளர்கள் மற்றும் 234 சட்டசபை தொகுதி பார்வையாளர்களுடன் வீடியோ கான்பரன்சிங் வாயிலாக முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

வீடியோ கான்பரன்சிங் வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்களுடன் அமைச்சர்களும் பங்கேற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆழ்வார்பேட்டையில் உள்ள தனது வீட்டில் இருந்தபடி காணொலி வாயிலாக இக்கூட்டத்தில் பேசினார்.

**ஸ்டாலின் பேச்சு**

அப்போது அவர் கூறியதாவது:

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 6 மாத காலம்தான் உள்ளது. இந்த தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற வேண்டும். இதற்காக தி.மு.க. அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஒவ்வொரு பகுதிகளிலும் வாக்குச்சாவடி முகவர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த பட்டியலை ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் சரி பார்க்க வேண்டும்.விறுப்பு வெறுப்புகளை மறந்து கட்சி நிர்வாகிகளை அரவணைத்து செல்ல வேண்டும். அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக செய்து கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பாடுபட வேண்டும்.இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் நாம் வெற்றி பெற்றதை விட இந்த பாராளுமன்ற தேர்தலில் கடுமையாக உழைத்து 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும். அதற்காக தேர்தல் பணிகளை தீவிரப்படுத்துங்கள்.தொகுதி பார்வையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் தவறாது பங்கேற்று கட்சி நிர்வாகிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

வருகிற தேர்தலில் கழகத்தின் வெற்றியே முக்கியம் என்கின்ற வகையில் ஒவ்வொருவரும் பணியாற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

**மாவட்ட செயலாளர்கள் பதவி நீக்கம்**

பாராளுமன்ற தேர்தல் பணி நம்மை எதிர்நோக்கி வந்து கொண்டுள்ளது. தேர்தலில் நமது வேட்பாளர் தோற்றால் மாவட்ட செயலாளர் பதவி நீக்கம் செய்யப்படுவார். தொகுதி பார்வையாளர்களுக்கு சரியாக ஒத்துழைக்காத மாவட்ட செயலாளர்களும் மாற்றப்படுவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக முக்கிய மாவட்டச் செயலாளர்களின் கருத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கேட்டறிந்தார். அப்போது மாவட்டச் செயலாளர்கள் பல்வேறு அறிவுரைகளையும் அவர் வழங்கினார்.

432வது நாளாக தொடரும் போராட்டத்திற்கிடையில்

# பரந்தூர் புதிய விமான நிலையப் பகுதியில் ஐ.ஐ.டி. குழுவினர் ஆய்வு: 13 கிராம மக்கள் கடும் எதிர்ப்பு

காஞ்சிபுரம், அக். 1–

**விமான நிலையம் அமையவுள்ள பரந்தூரில் ஐ.ஐ.டி. குழு ஆய்வு மேற்கொள்ள வருகை புரிந்ததற்கு ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராமமக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.**



சென்னையின் 2வது விமான நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமைய உள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடந்து வருகின்றன. புதிய விமானநிலையத்துக்கு பரந்தூர், ஏகனாபுரம், மேலேறி நெல்வாய், சிங்கிள்பாடி உள்ளிட்ட சுற்றியுள்ள கிராமங்களை ஒன்றிணைந்து 4,750 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கு பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

**432வது நாளாக போராட்டம்**

ஏகனாபுரம் கிராம மக்கள் புதிய விமான நிலையம் அறிவிப்பு வெளியான நாள் முதல் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 432வது நாளாக அவர்களது போராட்டம் நீடித்து வருகிறது. மேலும் இதுவரை நடந்த 6 கிராம சபை கூட்டங்களில் பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து 13 கிராம மக்கள் தீர்மானமும் நிறைவேற்றி உள்ளனர். மேலும் ஒரு கிராம சபை கூட்டத்தை புறக்கணித்து ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இதற்கிடையே பரந்தூர் விமான நிலையம் அமைய உள்ள இடங்களை கடந்த வாரம் பேராசிரியர் மச்சேந்திரநாதன் தலைமையிலான ஐ.ஐ.டி. ஆய்வுகுழு நேரில் பார்வையிட இருந்தது. இதற்கு பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு இயக்கத்தை சேர்ந்த அனைத்து கிராமமக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இந்த ஆய்வு திடீரென நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இன்று பரந்தூர் பகுதியில் பேராசிரியர் மச்சேந்திரநாதன் தலைமையில் ஐ.ஐ.டி. ஆய்வுகுழு விமான நிலையம் அமையவுள்ள பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். இதற்கு பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராமமக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் அவர்களை கட்டுப்படுத்த முயன்றனர். இதனால், பொதுமக்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிலர் கைது செய்யப்பட்டு காவல் துறையால் அழைத்துச்செல்லப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் வரவழைக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் பரந்தூரை சுற்றி உள்ள கிராமங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# கோவைக் குற்றாலத்தில் வெள்ளப் பெருக்கு: சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுப்பு

கோவை, அக். 1–

கோவைக் குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்கு இன்று அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ள கோவை சுற்றுப்புறப் பகுதிகளில் நேற்று இரவு பெய்த கனமழை காரணமாக அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கோயம்புத்தூரிலிருந்து 35 கி.மீ. தொலைவில் நகரத்தின் மேற்கே மேற்கு தொடர்ச்சிமலைத் தொடரில் கோவைக் குற்றால நீர்வீழ்ச்சி உள்ளது. இதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள்

தற்போது தொடர் விடுமுறையையொட்டி அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்தனர். இந்நிலையில், கேரள மாநிலத்தையொட்டிய பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக, கோவைக் குற்றாலம் நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளது.

இதனால், கோவைக் குற்றாலம் அருவி தற்காலிகமாக இன்று மூடப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் புதிதாக 55 பேருக்கு கொரோனா: ஒருவர் உயிரிழப்பு

டெல்லி, அக். 01–

இந்தியாவில் கொரோனா பாதிப்பு விவரங்களை ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் நாள்தோறும் வெளியிட்டு வருகிறது. அதன்படி, நேற்று முன்தினம் 41 பேருக்கு கொரோனா பாதித்த நிலையில், கடந்த 24 மணி நேரத்திலும் புதிதாக 55 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் தொற்று பாதித்தோரின் மொத்த எண்ணிக்கை 4,49,98,837 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 440 ஆக உள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக யாருக்கும் கொரோனா கண்டறியப்படாத நிலையில், 4 பேர் சிகிச்சையில் உள்ளனர். இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் கேரள மாநிலத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், இந்தியாவில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 5,32,032 ஆக உயர்ந்துள்ளது.

# மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் சுற்றுலா பஸ் கவிழ்ந்து விபத்து: பலி எண்ணிக்கை 9ஆக உயர்வு

## பிரதமர், முதலமைச்சர் இரங்கல்

ஊட்டி, அக்.1

நீலகிரி மாவட்டம், குன்னூர் மேட்டுப்பாளையம் மலைபாதையில் சுற்றுலா பஸ் பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் பலி எண்ணிக்கை 9ஆக உயர்ந்தள்ளது. இறந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.



குன்னூர் பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்



தென்காசி மாவட்டம் கடையம், ஆழ்வார்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 59 பேர் கேரளா, நீலகிரி, கோவை மருதமலை உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டனர். அதன்படி, கடந்த 28ந் தேதி கடையத்தில் இருந்து 59 பேரும் சுற்றுலா பஸ்சில் சுற்றுலாவுக்கு புறப்பட்டனர். டிரைவர்கள் 2 பேருடன் சேர்த்து மொத்தம் 61 பேர் இந்த பஸ்சில் பயணித்தனர்.

முதலில் இவர்கள் கேரள மாநிலம் சோட்டானிக்கரை, குருவாயூர் பகுதிகளுக்கு சென்று சுற்றி பார்த்தனர். பின்னர் நேற்று அதிகாலை, கேரளா வழியாக நீலகிரி மாவட்டத்திற்குள் வந்தனர். இங்குள்ள அனைத்து சுற்றுலா தலங்களையும் சுற்றி பார்த்தனர். பின்னர் மாலை கோவை செல்வதற்காக பஸ்சில் புறப்பட்டனர். ஊட்டியில் இருந்து குன்னூர் வழியாக மேட்டுப்பாளையம் செல்லும் மலைப்பாதையில் பஸ் வந்து கொண்டு இருந்தது.

மரப்பாலம் அருகே 9வது கொண்டை ஊசி வளைவில் பஸ் திரும்பியபோது, திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. தொடர்ந்து அந்த பஸ், சாலையோர தடுப்பை உடைத்துக் கொண்டு சுமார் 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து உருண்டது. இதனால் பஸ்சுக்குள் இருந்த பயணிகள் இடிபாடுகளுக்குள் சிக்கி அபய குரல் எழுப்பினர். அவர்களது அலறல் சத்தம் கேட்டு அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் போலீசாருக்கும், தீயணைப்பு துறையினருக்கும் தகவல் கொடுத்தனர். அதன்பேரில் விரைந்து வந்த அவர்கள், மீட்பு பணியை துரிதப்படுத்தினர். சாலையில் இருந்து கயிறு கட்டி பள்ளத்தில் இறங்கிய தீயணைப்பு துறையினர் பஸ்சுக்குள் சிக்கி இருந்தவர்களை ஒவ்வொருவராக மீட்டு மேலே கொண்டு வந்தனர். அவர்கள் ஆம்புலன்ஸ்கள் மூலம் குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**உறவினர்கள் கதறி அழுதனர்**

விபத்து நடந்த நேரம் இரவு என்பதால், விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி மிகவும் சவாலாக இருந்தது. பொது மக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்தும், டார்ச் லைட் மூலம் வெளிச்சம் ஏற்படுத்தியும் விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றினர். அங்கு சிகிச்சை பலனின்றி நிதின் (வயது 15), தேவிகா(36), முருகேசன் (65), முப்பிடாதி அம்மாள்(67), கவுசல்யா(25), இளங்கோ(67), ஜெயா(50), தங்கம்(40) ஆகிய 8 பேர் உயிரிழந்தனர். காயம் அடைந்தவர்கள் குன்னூர், மேட்டுப்பாளையம், ஊட்டி, கோவை அரசு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.செல்லம்மா என்ற மூதாட்டி உயிருக்கு ஆபத்தான நிலையில் கோவை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.தொடர்ந்து வேறு யாராவது பஸ்சில் சிக்கி இருக்கிறார்களா என்பதை அறிய இன்று காலையும் மீட்பு பணி தொடர்ந்தது.அப்போது பஸ்சின்அடிப்பகுதியில் இருந்துபெண் ஒருவர் பிணமாக மீட்கப்பட்டார். அவரது பெயர் பத்மராணி (57) என்பது தெரியவந்தது. அவரது உடலையும் மீட்டுபிரேத பரிசோதனைக்காக குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். இதனால் விபத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது. விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நீலகிரிக்கு விரைந்து வந்துள்ளனர். அவர்கள் இறந்தவர்களின் உடல்களை பார்த்து கதறி அழுதனர். இது அங்கிருந்தவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது.

இதனிடையே, மீட்புப் பணிகளுக்கு உதவி எண்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார். அதன்படி, 1077 மற்றும் 94437 63207 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமைச்சர்கள் ஆய்வு**

இந்த விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் முதலமைச்சர் உத்தரவுப்படி சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலாளர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) பிரபாகர், கலெக்டர் அருணா, டி.ஐ.ஜி.சரவணசுந்தர் உள்ளிட்டோர்சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணிகளை துரிதப்படுத்தினர். மேலும், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதலும் கூறினர். அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தனர். இந்த நிலையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று காலை நீலகிரி மாவட்டத்திற்கு வந்தார்.பின்னர் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ராமச்சந்திரன் ஆகியோர் நேராக விபத்து நடந்த மரப்பாலம் பகுதிக்கு சென்றனர். அங்கு விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட அவர், அங்கு நடந்து வரும் மீட்பு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்து அவர்கள் குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றார். அங்கு சிகிச்சை பெற்று வரும் சுற்றுலா பயணிகளை சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.லேசான காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் 32 பேருக்கு தலா ரூ.50 ஆயிரம் காசோலைகளை வழங்கினார். மேலும் இறந்த 9 பேரின் உடலுக்கும் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ராமச்சந்திரன் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

விபத்து பற்றிய தகவல் அறிந்ததும், மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வலர்கள் விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.விபத்தில் இறந்தவர்களுக்கு தலா ரூ.2 லட்சமும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்தார்.அதன்படி இன்று படுகாயம் அடைந்தவர்கள் மற்றும் லேசான காயம் அடைந்தவர்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.இறந்த 9 பேரின் உடல்களும் உடற்கூராய்வுக்கு பிறகு அரசு செலவில் சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். இறந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.2 லட்சத்திற்கான காசோலை அவர்களது உறவினர்களிடம் சொந்த ஊரில் வைத்து வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.அப்போது கூடுதல் தலைமை செயலர் எஸ். கே.பிரபாகர், மாவட்ட கலெக்டர் அருணா மற்றும் பலர் உள்ளனர்.

**பிரதமர் மோடி இரங்கல்: தலா ரூ. 2 லட்சம் அறிவிப்பு**

விபத்து குறித்து பிரதமர் சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே பேருந்து விபத்துக்குள்ளானதில் பலர் உயிர் இழந்தது வேதனை அளிக்கிறது. என் எண்ணங்கள் இறந்த குடும்பங்களுடன் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். உதவித் தொகையாக இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும், பிரதமர் நிவாரண நிதியில் இருந்து ரூ. 2 லட்சம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50,000 வழங்கப்படும்.

இவ்வாறு அந்த பதிவில் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

**தலா ரூ.2 லட்சம் நிவாரணம்: முதலமைச்சர்**

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

பஸ்சில் பயணம் செய்த 8 பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் தாம்பரம்**
**ந.க.எண்.3629/இ/2023**

கே எஸ் விஜயகுமார் த/பெ.சீத்தாராமன் மனுதாரர் தன் தாய் திருமதி எஸ் கல்யாணி என்பவர் பிளாட் எண் 198, 14வது குறுக்கு தெரு மகாலட்சுமி நகர், நந்திவரம், கூடுவாஞ்சேரி செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் வட்டம் 603202 என்கிற விலாசத்தில் 22.5.2018 என்ற தேதியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால் தற்போது மேற்படி இறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பெயரில் எவருக்கேனும் ஆட்சேபனே இருப்பின் தங்கள் ஆட்சேபனையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

K.S.விஜயகுமார்
மனுதாரர்

**சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்**
CIN: L65991TN1993PLC028228
'சிட்டி சென்டர் பிளாசா', (முதல் தளம்), எண்.7, அண்ணா சாலை, சென்னை – 600 002

செப்டம்பர் 29, 2023 அன்று ஆடியோ வீடியோ காட்சி முறையில் நடைபெற்ற கம்பெனியின் 30வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கம்பெனியின் உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை மின்னணு வாக்கு மற்றும் மின் வாக்கு முறையில் அளித்தனர். மின்னணு வாக்குப் பதிவை நேர்மையாக, வெளிப்படையாக நடத்தி அதனை ஆராய்வதற்காக அதன் ஆராய்வாளராக M/s. சினேகா ஜெயின் & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் திருமதி. சினேகா ஜெயின் அவர்களை கம்பெனி நியமித்தது. ஆராய்வாளர் அவரது அறிக்கையை கம்பெனியின் கம்பெனி செயலாளர் திருமதி. ராதிகா மகேஸ்வரியிடம் செப்டம்பர் 30, 2023 அன்று சமர்ப்பித்தார். அது அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட அறிக்கையின்படி, பின்வரும் முடிவுகளை கம்பெனி அறிவிக்கிறது.

**வாக்களிப்பு முடிவுகளின் விவரங்கள்**

| வ. எண். | விவரங்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1 | வருடாந்திர பொதுக் கூட்டம்/ அசாதாரண பொதுக் கூட்டத் தேதி | 30வது வருடாந்திர பொதுக் கூட்டம், செப்டம்பர் 29, 2023 |
| 2 | பதிவுத் தேதி அன்று மொத்த பங்குதாரர்கள் எண்ணிக்கை | 2877 |
| 3 | நேரடியாக அல்லது பதிலி மூலம் கூட்டத்தில் கலந்து கொண்ட மொத்த பங்குதாரர்கள் எண்ணிக்கை: புரோமோட்டர்ஸ் மற்றும் புரோமோட்டர் குரூப்: பொது : | நேரடி கூட்டம் அல்லது பதிலியை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏனெனில் வருடாந்திர பொதுக் கூட்டம் VC/OAVM மூலம் நடைபெற்றது. |
| 4 | காணொலி காட்சி மூலம் கூட்டத்தில் கலந்து கொண்ட மொத்த பங்குதாரர்கள் எண்ணிக்கை: புரோமோட்டர்ஸ் மற்றும் புரோமோட்டர் குரூப்: பொது : | 08<br>08 |

**வாக்குச் சீட்டு மற்றும் மின்னணு வாக்கு முடிவுகள் அறிவிப்பு**

| | வ. எண். | தீர்மான வகை | மின்னணு வாக்குப் பதிவில் பதிவான வாக்குகள் | மின் வாக்கெடுப்பில் பதிவான வாக்குகள் | ஆதரவான வாக்குகள் எண்ணிக்கை | ஆதரவான வாக்குகள் % | எதிரான வாக்குகள் எண்ணிக்கை | எதிரான வாக்குகள் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச் 31, 2023 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளை ஏற்றுக்கொள்வது | 1 | சாதாரணம் | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |
| திரு. மகேஷ் சந்தக் அவர்களை இயக்குனராக மறு நியமனம் செய்தல் | 2 | சாதாரணம் | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |
| திரு. பிரசன் சந்த் ஜெயின் அவர்களை இயக்குனராக மறு நியமனம் செய்தல் | 3 | சாதாரணம் | 4757820 | 0 | 4745959 | 99.75% | 11861 | 0.25% |

குறிப்பு: ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளை விட ஆதரவாக வாக்களிக்கப்பட்ட வாக்குகள் அதிகம். அதன்படி, மின்னணு வாக்களிப்பு மற்றும் மின் வாக்களிப்பு மூலம் நடத்தப்பட்ட வாக்குப் பதிவில் மேற்கண்ட தீர்மானங்கள், தேவையான பெரும்பான்மையுடன் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இடம் : சென்னை
தேதி : 30.09.2023

சுகல் & தமானி ஷேர் புரோக்கர்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
ராதிகா மகேஸ்வரி
கம்பெனி செயலாளர்